*DEPOSITION OF WITNESS*
*(Chapter XX of BNSS)*

***IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.***
***CC.No. 108/2024 – P.W.3 (LW 5 )***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ்குமார் | வயது | 39 |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | ஜாதி | |
| தொழில் | மெக்கானிக் | மதம் | |
| ஊர் | புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.01.2026.*

**முதல் விசாரணை**

அ.சா.1, அ.சா.2, ஆஜர் எதிரி அனைவரையும் தெரியும். அவர்கள் தெருக்காரர்கள். அ.சா.1 புகார் கொடுத்த சம்பவம் பற்றி எனக்கு தெரியும். நானும், எனது மைத்துனர் கபிலனும் புலிவலம் கடைத்தெருவிற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது குடவாசல் போலிசார் இந்த வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். கையொப்பம் செய்த தேதி, மாதம் நினைவில்லை. என்னுடன் சாட்சி கபிலனும் கையொப்பம் செய்தார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் குறுக்கு விசரணை :**

நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் அ.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது

சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக போலிசார் கேட்டுக் கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XX of BNSS)*

***IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.***
***CC.No. 108/2024 – P.W.4 (LW6 )***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கபிலன் | வயது | 29 |
| தகப்பனார் பெயர் | கலியபெருமாள் | ஜாதி | |
| தொழில் | டிரைவர் | மதம் | |
| ஊர் | புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.01.2026.*

**முதல் விசாரணை**

அ.சா.1, அ.சா.2, அ.சா.3 மற்றும் ஆஜர் எதிரி ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் என் தெருக்காரர்கள். அ.சா.1 புகார் கொடுத்த சம்பவம் பற்றி எனக்கு தெரியும். 30.08.2022 ம் தேதி காலை 11.00 மணியளவில் அ.சா.1 குந்தவைநாச்சியார் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் இந்த வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். நானும், ரமேஷ் குமாரும் உடனிருந்து சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் எங்களை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான்.

**அரசு தரப்பில் குறுக்கு விசரணை :**

நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும பேப்பரில் எழுதப்பட்டிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக போலிசார் கேட்டுக் கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. அ.சா.1 என் ஊர்க்காரர் என்பதாலும், எனக்கு

வேண்டப்பட்டவர் என்பதாலும் அ.சா.1க்கும், ஆஜர் எதிரிக்கும் உள்ள முன்பகை காரணமாக அ.சா.1 கேட்டுக் கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.